# பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒரே தேவனே

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் T5b என்ற பாடத்தை வாசிக்கவும்.




**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, பரலோகப் பிதாவே தேவன், அந்த தேவன் இயேசுவாக நம்மிடம் வந்தார், மற்றும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியே என்று இயேசுவும் அப்போஸ்தலர்களும் போதித்ததை போற்றும் படியாக எங்களுக்கு உதவும்."

**குறிப்பு:** ஒரே ஒரு மெய் தேவனே உண்டு. அவரே பிதாவானவர் (நமது சிருஷ்டிகர்); அவரே குமாரனானவர். (இயேசு, நமது இரட்சகர்) அவரே ஆவியானவர். (நமக்கு உதவும் தெய்வீக தேற்றரவாளர்). இவர்கள் ஒரே தேவனே. இவர்கள் சிருஷ்டிப்பிலும் இரட்சிப்பிலும் இணைந்து பணியாற்றுகின்றனர். இதை இயேசுவின் ஞானஸ்நானத்தில் யோவான் அறிவிக்கிறார்.

### 1. திரித்துவத்தைப் பற்றி போதிக்க ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் ஆயத்தப்படுக.

கிறிஸ்தவர்களை வெறுத்த பவுல் எவ்வாறு இயேசுவே தேவன் என்று அறிந்து கொண்டார் என்பது பற்றியும், எவ்வாறு பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய புதிய புரிந்து கொள்ளதலைப் பெற்றார் என்பதையும் (வசனம் 17) **அப். 9:1-19** ல் காண்க.

பிதாவையும், பரிசுத்த ஆவியானவரையும், தம்மையும் பற்றி இயேசு என்ன கூறினார் என்பதை **யோவான் 14:23-26**ல் காண்க.

குமாரனை கனப்படுத்தும்போது நாம் யாரை கனப்படுத்துகிறோம் என்பதையும் இது ஏன் இப்படியாக இருக்கிறது என்பதையும் **யோவான் 5:19-30** ல் காண்க.

**ரோமர்** 1:1-4, 5:1-5, 7:4-6, 8:1-4, 8:6-11, 8:16-17, 8:26-39, 14:14-18 மற்றும் 15:30-33 ஆகிய வசனங்களில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் ஒன்றிணைந்து நமக்குள் செய்வதையும், நம்மை செய்யவைப்பதையும் காண்க.

**குறிப்பு:** புதிய ஏற்பாடு திரித்துவத்தை பலவழிகளில் விவரிக்கிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, சிருஷ்டிகர், இரட்சகர், பரிசுத்தப்படுத்துவர்; தேவன், கர்த்தர், பரிசுத்த ஆவியானவர்; இராஜா, மேசியா, போதகர்.

இந்த **முக்கிய உண்மைகளை** நினைவில் வைத்துக் கொள்க:

- திரித்துவம் என்பது நித்திய தேவன். அவர் பொருள் வயமான இந்த உலகத்தைக் கடந்து அதன் நேரம் மற்றும் வெளிக்கு (Space) அப்பாற்பட்டு நிற்பவர்.
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (இயேசுவின் பிறப்பு) ஓர் இடத்தில் (பெத்லகேம்) தேவன் இயேசுவாக மனிதன் ஆனார்.
- இயேசு மனிதனாகப் பிறந்தார். அவர் தெய்வீக வல்லமையையும் மனித பலவீனங்களையும் காட்டினார்.
- சில சபைகள் இயேசுவின் தெய்வீக மற்றும் மனிதத் தன்மைகள் ஒரே நபருக்குள் ஒன்றுகலந்தன என்று போதிக்கின்றன. பிற சபைகள், இயேசுவின் தெய்வீக மற்றும் மானிடத் தன்மைகள் வெவ்வேறாக நிலவின என்று போதிக்கின்றன. இயேசு கடவுளாகவும் மனிதனாகவும் இருந்தார் என்பதே அறிந்து விசுவாசிக்க வேண்டிய விஷயமாகும்.

**உங்களை நீங்களே சோதித்தறியுங்கள்.** இயேசு மற்றும் புதிய ஏற்பாட்டின் படி கீழ் வருவனவற்றில் எந்த கருத்துக்கள் உண்மையானவைகள்?

- தேவன் மட்டுமே செய்யக் கூடிய வேலையை இயேசு செய்கிறார்.
- இயேசு பிதாவோடு பேசுகிறார். பிதா இயேசுவோடு பேசினார்.
- இயேசு நமக்கு பரிசுத்த ஆவியை அனுப்புகிறார்; இயேசு ஆவியாக நம்மிடம் வந்தார்.
- இயேசுவை கனப்படுத்தும் போது நாம் தேவனை கனப்படுத்துகிறோம்.
- நாம் பிதா, குமாரன், ஆவியானவரிடத்தில் ஜெபிக்கலாம். *(பதில்: இதில் எல்லா கருத்துக்களுமே உண்மையானவைகளே)*

## அதானாசியசும் அரியசும் (Athanasius and Arius)

இயேசு யார் என்பது குறித்து இரண்டு நான்காம் நூற்றாண்டு எகிப்திய இறையியலாளர்கள் விவாதித்தனர். **அரியஸ்,** திரித்துவத்தை மறுத்தார். தேவனின் ஒருமையை வலியுறுத்தினார். அவர், இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது தேவ வார்த்தை அவர் மேல் இறங்கி வந்தது என்றும், அதன் மூலம் “தேவனுடைய குமாரன்” என்று அழைக்கப்பட்ட மேசியாவாக அவரை ஆக்கியது என்றும் கூறினார். ரோமப் பேரரசில் அவருடைய போதகம் பரவியது.

**அதனாசியஸ்,** தேவ குமாரன் ஜீவ வார்த்தையானவர் என்று போதித்தார். இயேசு பிறந்து ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னரே அவர் பிதாவோடும் இருந்தார் என்றும், ஒரே தேவன் என்பவர் நித்தியமாக பிதா குமாரன் என்று இருவர் என்று கூறினார். பின்னர் அவர் பரிசுத்த ஆவியானவரும் தேவனே என்று கண்டார். பின் ஒரே தேவன் என்பவர் நித்தியமாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவர் என்று போதித்தார்.

**கி.பி. 325**ல், சாம்ராஜ்யம் எங்கும் இருந்த கிறிஸ்தவத் தலைவர்கள் நைசியா (Nicea) என்ற இடத்தில் கூடி, அரியசின் கருத்தை விடவும் அதனாசியசின் போதகமே வேதாகமப் படி இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டனர். ஆகவே அவர்கள் அதனாசியசின் திரித்துவக் கொள்கையை அங்கீகரித்தனர். இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் திரித்துவமே உண்மை என்று ஏற்கின்றனர். அதை மறுப்பவர்கள் “அரியன்கள்” (Arians) என்று அழைக்கப்படுகின்றனர்.

சில **மதங்கள்** இயேசுவை தேவன் என்று கனப்படுத்த மறுக்கின்றன. இயேசு தேவன் என்பதையும், அவர் தமது சரீரத்தோடு மரித்தோரில் இருந்து எழுந்தார் என்பதையும் யெகோவாவின் சாட்சிகள் (Jehovah’s witnesses) மறுக்கின்றனர். இயேசு மரித்த போது தெய்வமானார் என்றும், மோர்மோன்களும் (Mormons) கடவுள்கள் ஆவார்கள் என்றும் மோர்மோன்கள் கூறுகின்றனர். இயேசு தெய்வம் இல்லை என்றும், அவர் மரித்து உயிர்த்தெழவில்லை என்றும் இஸ்லாம் போதிக்கிறது. பிதாவுக்கு நாம் கொடுக்கும் கனத்தைப் போலவே குமாரனையும் கனப்படுத்த வேண்டும் என்ற வேதாகமக் கட்டளைக்கு மாறாக இவைகள் நடக்கின்றன (யோவான் 5:19-30).

**2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகள் குறித்து உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

உங்கள் மந்தையில் உள்ள விசுவாசிகள், போலி போதகர்களால் திரித்துவத்தைக் குறித்து குழப்பம் அடைந்திருந்தாலும், புரிந்து கொள்ளுவதில் சிரமப்பட்டாலும் நேரடியாக சென்று சந்தித்து கீழ்க்காணும் சத்தியங்களை விளக்கவும்.

- நித்தியமாக இயேசு தேவனுடைய குமாரனே. அவர் மானிடனானார். தேவனாகவும் மனிதனாகவும் என்றென்றும் இருப்பார்.
- திரித்துவம் மூன்று கடவுள்கள் அல்ல. ஒரே தேவனே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக இருக்கிறார்.
- தேவன் ஒருவரே; அவரே மூன்று ஆள்தத்துவம் உடையவராக இருக்கிறார். இந்த இரகசியத்தை மனிதனால் விளக்க முடியாது. அவர்கள் தனித்தனி நபர்கள் என்று கூட்ட முடியாது; அவர்கள் ஒன்றாக இருக்கின்றனர்.

- இயேசு நித்திய தேவன். அவர் மனிதனானார். அவர் தேவனாகவும் மனிதனாகவும் இருக்கிறார். இயேசு மனிதனே என்றும், அவருக்குள் இருக்க தேவனால் அனுப்பப்பட்ட ஆவியே கிறிஸ்து என்றும் கூறுவது தவறாகும்.
- நித்திய காலமாக பிதாவும் குமாரனும் ஒருவரோடு ஒருவர் பேசி இணைந்து செயல்படுகின்றனர். குமாரன் மானிடர் ஆன பிறகும் இந்தத் தொடர்பும் ஒத்துழைப்பும் தொடர்ந்தது. ஆகவே, இயேசு கடவுளானால் ஏன் தந்தையை நோக்கி ஜெபிக்க வேண்டும் என்று கேட்பது தவறாகும்.
- திரித்துவம் என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லை. பிதா, குமாரன், ஆவியானவர்களுக்கு இடையில் வேதாகமத்தில் காணப்படும் ஒற்றுமையைக் குறிக்க இந்த வார்த்தையை நாம் உபயோகிக்கிறோம். ரோமன் கத்தோலிக்கர்களால் கண்டு பிடிக்கப்பட்டதே திரித்துவம் என்று கூறுவது தவறாகும்.

தலைவர்களைப் பயிற்றுவிக்கும் பிற மந்தைகளின் மேய்ப்பர்களை சந்தித்து அவர்களோடு இந்த உண்மைகளைக் குறித்துப் பேசவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்.

தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற நடவடிக்கைளை செயல்படுத்துங்கள்.

- இயேசு தேவன் என்று சவுல் அறிந்து கொண்டது எவ்வாறு என்றும், அவர் பரிசுத்த ஆவியானவரை பற்றி புதிதாகப் புரிந்து கொண்டது என்ன என்பது பற்றியும் அறிந்துகொள்ள **அப்.9:1-19**ல் உள்ள கதையை வாசிக்கவும் அல்லது கூறவும் (வச.17)
- நமது இரட்சிப்பிலும், நமது பரிசுத்தத்திலும், நாம் இயேசுவுக்காக அளிக்கும் சாட்சியிலும், தேவனுக்காக நாம் செய்யும் எல்லாவற்றிலும் திரித்துவம் எவ்வாறு ஈடுபடுகிறது என்பதை **ரோமர் 1:1-4** ஐ வாசித்து விளக்கவும்.
- பகுதி 1 ல் நீங்கள் படித்தவற்றை **விவரித்து** அதே கேள்விகளைக் கேட்கவும்.
- **சிறுவர்கள்** தாங்கள் ஆயத்தம் செய்தவற்றைப் பெரியவர்களுக்கு விளக்கவும்.
- **அதனாசியஸ்** மற்றும் **அரியஸ்** பற்றிய கதைகளைக் கூறவும்.
- இயேசு தேவன் என்று முதன் முதலில் அறிந்து கொண்டதைப் பற்றிய **சாட்சிகளை** விசுவாசிகள் கூறலாம்.

ï **கர்த்தரின் பந்தியை** அறிமுகம் செய்ய மத்தேயு 3:13-17 ஐ வாசிக்கவும். இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது இணைந்து செயல் பட்டது போல, பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், ஆவியாகிய தேவனும் இணைந்து செயலாற்றுகின்றனர். பாவத்தை மூட குற்றமற்ற இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்று பிதா விதித்தார். குமாரன் தன் இரத்தத்தை சிந்தினார். நாம் அப்பத்திலும் பானத்திலும் பங்கேற்கும் போது பரிசுத்த ஆவியானவர் நம்மை இயேசுவின் இரத்தத்திலும் சரீரத்திலும் பங்கேற்க வைக்கிறார் (1 கொரி.10:16-17).

- **ஜெபிக்கவும்,** செயல்பாடுகளை உறுதி செய்யவும், ஒருவரை ஒருவர் ஊக்குவிக்கவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைக்கவும்.
- சேர்ந்து மத்.3:16-17 ஐ **மனப்பாடம்** செய்க.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net